**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**05 பிப்ரவரி 2021 / 23 ஜமாதியுல் ஆகிர் ஹிஜிரி 1442**

# <u>அல்லாஹ்வின் பால் திரும்புதல்</u>

الحَمدُ لِلَّهِ عَلَى إِحسَانِهِ، وَالشُّكرُ لَهُ عَلَى تَوفِيقِهِ وَامتِنَانِهِ، وَأَشهَدُ أَن لَا إِلَهَ إِلَّا
اللهُ وَحدَهُ لَا شَرِيكَ لَهُ تَعظِيمًا لِشَأنِهِ، وَأَشهَدُ أَنَّ سَيِّدَنَا وَنَبِيَّنَا مُحَمَّدًا عَبدُهُ
وَرَسُولُهُ الدَّاعِي إِلَى رِضوَانِهِ، اللَّهُمَّ صَلِّ وَسَلِّم وَبَارِك عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى
آلِهِ وَأَصحَابِهِ وَإِخوَانِهِ.أَمَّا بَعدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا
وَأَنتُم مُسلِمُونَ.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கும் அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் தடை செய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” (பக்தியை) அதிகரித்துக் கொள்வோமாக! அல்லாஹ்வை தொடர்ந்து நினைவில் கொள்கின்ற, ஒவ்வொரு சூழ்நிலையிலும் அல்லாஹ்வுக்கு நெருக்கமாக இருக்கின்ற அடியார்களில் நின்றும் நாம் ஆகுவோமாக!

**சகோதரர்களே!**

அல்லாஹ்வின் அடியார்கள், அல்லாஹ்வை நெருங்குவதற்கு முயற்சிக்கும் காலமெல்லாம் அல்லாஹ் அவர்களை ஒருபோதும் கைவிடுவதில்லை.

பின்வரும் ஹதீதுல் குத்ஸியில் சிந்தனை செய்வோமாக! அல்லாஹ் கூறுவதாக இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

"என் அடியார் என் பக்கமாக ஒரு அங்குலம் (அதாவது, ஒரு ஜான்) நெருங்கி வந்தால், நான் அவர் பக்கமாக ஒரு முழம் நெருங்கி வருகிறேன்; என் அடியார் என் பக்கமாக ஒரு முழம் நெருங்கி வந்தால் நான் அவர் பக்கமாக இரண்டு முழங்கள் நெருங்குகிறேன். என் அடியார் என் பக்கமாக நடந்து வந்தால் நான் அவர் பக்கமாக ஓடி வருகிறேன். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

அல்லாஹ்வை வணங்கி, வழிபடுகின்ற அடியார்களுக்கு, தனது அருளையும் உதவியையும் எவ்வாறு விசாலமாக அல்லாஹ் வழங்குகிறான் என்பதை இங்கு நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இம்மாதிரியான மனநிலையை ஒவ்வொரு முஸ்லிமும் தன்னில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது, எப்போதும் அவரது மனதில் அல்லாஹ்வின் சிந்தனை காணப்பட வேண்டும். மேலும், இலகுவான, அல்லது கஷ்டமான அனைத்து காலங்களிலும் அல்லாஹ்வின் மீதான "தக்வா" (பக்தியை) அடைவதற்கு அவர் தொடர்ந்து முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

**சகோதரர்களே!**

மனிதர்களான நம்மிடம் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. நாம் நமது சில தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்பினால் அல்லது சில கடமைகளை முடிக்க விரும்பினால் மற்றவர்களிடம் உதவி தேடும் பழக்கம் நம்மிடம் உள்ளது. இவ்வாறு, சில நேரங்களில் மற்றவர்களிடம் உதவி தேடுவதில் நாம் கவனம் செலுத்துவதால், அல்லாஹ்வின் பக்கம் நெங்குவதற்கும் நாம் முயற்சிப்பது அவசியமாகும் என்பதை மறந்து விடுகிறோம். மேலும், நாம் அடைய விரும்பும் விஷயங்களெல்லாம் அல்லாஹ்வின் புறத்திலிருந்துதான் அருளாக நமக்கு வழங்கப்பட வேண்டியதுள்ளது; நமது விருப்பங்கள் நிறைவேற அல்லாஹ்வின் அனுமதி அவசியமாகின்றது என்பதையும் நாம் மறந்து விடுகிறோம்.

**சகோதரர்களே!**

அல்லாஹ்விடமிருந்து தூரமாக இருக்கும் நமது நிலையானது, சிலவேளைகளில் நாம் நமது அன்றாட வாழ்க்கை விஷயங்களில் மூழ்கி விடுவதற்கும், அவ்விஷயங்களுடன் நாம் கட்டப்பட்டு, முடிச்சி போடப்பட்டு காணப்படுவதற்கும் காரணமாக உள்ளது. நாம் நமது வேலைகள், கடமைகள் மற்றும் பல பொறுப்புகளின் காரணமாக அலுவல்மிக்கவர்களாக இருக்கலாம்; எனினும், நமது வணக்க வழிபாடுகளை ஒருபோதும் மறந்து விடக் கூடாது. நம்மைப் படைத்தவனுடனான நமது உறவை ஒருபோதும் புறக்கணித்து விடக் கூடாது.

தமது இறைவனை நினைவில் கொள்ளும் மிகச் சிறந்த அடியார்களின் நிலையைப் பற்றி திருக்குர்ஆனின் "அன்னிஸாவு" எனும் அத்தியாயத்தின் 103-வது வசனத்தில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

فَاذْكُرُوا اللَّهَ قِيَامًا وَقُعُودًا وَعَلَىٰ جُنُوبِكُمْ

பொருள்: (அடியார்களே!) நீங்கள் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும், விலாப்புறங்களின் மீது (படுத்திருக்கும்) நிலையிலும் அல்லாஹ்வை "திக்ரு" (தியாணம்) செய்யுங்கள்.

**சகோதரர்களே!**

அல்லாஹ்வை தொடர்ந்து நினைவில் கொள்வதற்கும், அல்லாஹ்வை நெருங்க முயற்சிப்பதற்கும் நமக்கு உதவியாக உள்ள சில வழிகளை உங்களுடன் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவை பின்வருமாறு:

**முதன்முதலாக, இறைத்தூதர்(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" எனும் வாழ்க்கை வழிமுறையை நமது அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்துவது.**

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" எனும் வாழ்க்கை வழிமுறையை நாம் செயல்படுத்தினால், நமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக அதனை ஆக்கிக் கொண்டால் நமது உள்ளங்கள் அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமானவையாக ஆகி விடும். அல்லாஹ், திருக்குர்ஆனின் "ஆலி-இம்ரான்" எனும் அத்தியாயத்தின் 31-வது வசனத்தில் கூறுகிறான்:

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى يُحْبِبْكُمُ ٱللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ٣١

பொருள்: (நபியே! அடியார்களிடம்) நீர் கூறும் : நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான். உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான். அல்லாஹ் அதிகம் மன்னிப்பவனாகவும் மிக்க கருணையுடையவனாகவும் இருக்கின்றான்.

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" எனும் வாழ்க்கை வழிமுறையை நமது அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்துவதும், அதனை நமது அன்றாட வாழ்க்கையின் ஓர் அங்கமாக ஆக்கிக் கொள்வதும் மிகவும் எளிதான, சுலபமான காரியமாக உள்ளதால், அதனை நாம் செயல்படுத்த முயற்சிக்க வேண்டும். உதாரணமாக, ஒவ்வொரு காரியத்தையும் "பிஸ்மில்லாஹ்" (அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பம் செய்கிறேன்) எனக் கூறி தொடங்குவது, நாம் எங்கிருந்தாலும் அஸ்தஃபிருல்லாஹ் (அல்லாஹ்விடம் மன்னிப்பைத் தேடுகிறேன்) எனக் கூறுவது, "திக்ரு" (தியாணம்) செய்தல், நமது குடும்பத்தார்கள் மற்றும் நண்பர்களை புன்முறுவல் பூத்த முகத்துடன் சந்திப்பது, அவர்களிடம் அன்பான வார்த்தைகளைப் பேசுவது ஆகியவற்றைச் செயல்படுத்துவது மிகவும் எளிதான காரியமாகும்.

நாம் நமது அன்றாட வாழ்க்கையில் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" வைச் செயல்படுத்தினால் அல்லாஹ்வுடனான நமது உறவு உறுதியாகி விடும்; அதன் காரணமாக, அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" (பக்தி) யின் அளவும் அதிகரித்து விடும். இன்ஷாஅல்லாஹ்.

**இரண்டாவதாக, நமக்கு அருளப்பட்டுள்ள அருள்களுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது. அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிவது.**

அல்லாஹ் நமக்கு அருளியுள்ள அருட்கொடைகள் எண்ணற்றவையாகும். எனவே, "அல்ஹம்துலில்லாஹ்" (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!) எனும் தஸ்பீஹை உளப்பூர்வமாக, முடிந்த அளவு அடிக்கடி ஓதிக் கொள்வோமாக! நாம் நமது இலகுவான, செழிமையான காலத்தில் அல்லாஹ்வின் சிறிய அருட்கொடைக்காகக் கூட நன்றி செலுத்தினால், நமது கஷ்டமான காலத்தில் அல்லாஹ்வை நாம் நினைவில் கொள்வது எளிதாகி விடும். அல்லாஹ்விடம் துஆ (பிரார்த்தனை) செய்வோமாக! அல்லாஹ்வை நினைவில் கொண்டு, நற்காரியங்களைச் செய்யும் அடியார்களில் ஒருவராக நம்மையும் நமது குடும்பத்தார்களையும் ஆக்க வேண்டுமென்று அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! இறைத்தூதர்(ஸல்) அவர்கள் நமக்குப் போதித்துள்ள பின்வரும் பிரார்த்தனையை அடிக்கடி ஓதி, அதில் சிந்தனை செய்வோமாக!

اللَّهُمَّ أَعِنِّي عَلَى ذِكرِكَ وَشُكرِكَ وَحُسنِ عِبَادَتِكَ

பொருள்: யா அல்லாஹ்! உன்னை நினைவில் கொள்வதற்கும், உனக்கு நன்றி செலுத்துவதற்கும் உன்னை சிறப்பாக வணங்கி, வழிபடுவதற்கும் எனக்கு உதவி செய்வாயாக! (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூதாவுத் ரஹ்)

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, இம்மையிலும் மறுமையிலும் நிரந்தரமான "தக்வா" வையும் வெற்றியையும் நம்மனைவருக்கும் வழங்குவானாக!

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْمُ

## இரண்டாவது பிரசங்கம்

الْحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ الْعَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ، وَالْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الْأَحْيَاءِ مِنهُم وَالْأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا الْبَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالْمِحَنَ، مَا

ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ الْبُلْدَانِ عَامَّةً، يَارَبَّ الْعَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الْآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ، وَإِيتَاءِ ذِي الْقُرْبَى وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.